# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2497/58 - 2026 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2026.07.17

2497/58 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அக்கரைப்பற்று மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், அக்கரைப்பற்று மாநகர சபையின் இலக்கம் 05 காதிரியா தெற்கு வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. உதுமா லெப்பை உவைஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய காங்கிரஸ் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான அக்கரைப்பற்று மாநகர சபையின் இலக்கம் 05 காதிரியா தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. முகம்மது அப்துல் காதர் அப்துல் ஹையு என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

அக்கரைப்பற்று மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தநாயக்க முதியன்சேலாகே கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. முகம்மது அப்துல் காதர் அப்துல் ஹையு என்பவர் அக்கரைப்பற்று மாநகர சபையின் இலக்கம் 05 காதிரியா தெற்கு வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க,**
**தெரிவத்தாட்சி அலுவலர்,**
**அக்கரைப்பற்று மாநகர சபை.**

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை.
2026,யூலை 16.

EOG 07 - 0253


1A - PG 7811— 04 (2026/07) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*